[1982 பிப்ரவரி 11]

AMBATTUR INDUSTRIAL ESTATE.

*1. —THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(a) the total number of Industrial units located at the Ambattur Industrial Estate; and,

(b) the total capacity of the Ambattur Industrial complex to provide plots to open industrial units.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) 974 கூடங்கள்.

(ஆ) அம்பத்தூர் சீர்திருத்தப்பட்ட மனைகள் தொழிற் பேட்டையில் உள்ள நிலப்பரப்பு மொத்தம் 773 ஏக்கர். அது 372 மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 712·967 ஏக்கர் அளவுள்ள 333 மனைகள் தொழில் முனைவர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டு விட்டன.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் தொழிற்பேட்டையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ? அந்தத் தொழிற்பேட்டையில் எத்தனை இடங்கள் உடல் ஊனமுற்றோருக்கு தொழில் தொடங்குவதற்காக முன்னுரிமை அளித்து ஒதுக்கப்பட்டுள்ளன அல்லது, அப்படி ஒதுக்குவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் மூலக்கேள்விக்கு பதில் அளிக்கின்ற நேரத்திலேயே 773 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னேன். அதில் 712 ஏக்கர் அளவிற்கு இப்போது ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மீதமுள்ள 61 ஏக்கர் நிலத்தை 39 மனைகளாகப் பிரித்து ஒதுக்கீடு செய்வதற்கு தயாராக இருக்கிறது. இவற்றிற்கு ஒதுக்கீடு கோரி விண்ணப்பங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. இதனை தொழில் நுட்ப அதிகாரிகள் குழு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. விரைவில் தொழில் முனைவார்களுக்கு வழங்கப்படும்.

(முற்பகல் 9-10)

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, மொத்தம் 974 தொழிற்கூடங்கள் என்று இருக்கிறபோது எத்தனை தற்போது இயங்கி வருகின்றன ? புதிதாகக் கட்டப்படுகிற தொழிற்கூடங்கள் எத்தனை ? கட்டப்பட இருக்கிற அந்தத் தொழிற்கூடங்களில் பணி எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 11

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, 974 தொழிற்கூடங்களில் தற்போது 793 தொழிற்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. நான்கு வகைகளில் அவை செயல் பட்டு வருகின்றன. வாடகைத் தொழிற்கூடங்களில் இயங்கும் தொழில்கள் 245. சீர்திருத்தப்பட்ட முறைகளில் அமைந்துள்ள தொழில்கள் 239. சிட்கோ உதவித் திட்டத்தின்கீழ் அமைந் துள்ள தொழில்கள் 209. சின்னஞ்சிறு தொழில்கள் (டைனி செக்டார்) 100 ஆக 793 தொழிற்கூடங்கள் தற்போது இயங்கு கின்றன. அடுத்து, 181 தொழிற்கூடங்கள் விரைவில் உருவாக இருக்கின்றன. சிட்கோ உதவித் திட்டத்தின் கீழ் அமைகின்ற தொழிற்கூடங்கள் 81. சின்னஞ்சிறு தொழில்கள் (டைனி செக் டார்) 100. ஆக இரண்டு இனங்களில் 181 தொழிற்கூடங்கள் வருகிற ஏப்ரல் மாதம் இறுதிக்குள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற்கூடங்கள் இயங்குவது பற்றிச் சொன்னார்கள். தொழிற் கூடங்களைத் தொடங்குவதற்கு அம்பத்தூரில் மட்டுமல்லாமல் சென்னையை சுற்றியுள்ள தொழில் நகர்களில் இருக்கிற அரசுக்குச் சொந்தமான காலி நிலங்களை இப்படி தொழிற்கூடங்கள் அமைக்க குத்தகை முறை யில் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப் படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொள்ளாச்சியிலுள்ள "Top Slip" பகுதியை அழகுபடுத்துந் திட்டம்.

*வினா எண். 143—திரு. எம். வி. இரத்தினம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

பொள்ளாச்சிப் பகுதியில் உள்ள "T p Sl p" பகுதியை வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகை யில் அழகு படுத்தும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அதை மாவட்ட உலாத் தலமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீல னையில் உள்ளது.